பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை, சென்னை – 6
அவர்களின் செயல்முறை ஆணை.

முன்னிலை: மருத்துவர். தி. சி. செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,

ந.க.எண். 2421470/ப.தொ.4/2022/இரு3, நாள் : 13.06.2025.

பொருள்: பொது சுகாதாரம்– பணியாளர் தொகுதி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. ப. ரவிப்பிரகாஷ் த/பெ (அமரர்) திரு. அ. பரமசித்தர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் – பணி வரன்முறைப்படுத்துதல் – ஆணை பிறப்பித்தல்–தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள்: 08.03.2023.
2. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண். 2421470/ப.தொ.4 /2022/இரு3, நாள்: 29.01.2024.
3. திருவண்ணாமலை மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களின் கடித ந.க.எண். 788/அ2/2024–2, நாள். 24.06.2024.

*******

**ஆணை:**

இத்துறையில் கோயம்புத்தூர் சுகாதாப்பகுதி மாவட்டத்தில் முடீஸ் நகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சமைப்பவர் மற்றும் நீராளுநராக திரு. அ. பரமசித்தர் என்பவர் பணிபுரிந்து வரும்போது 14.02.2010 தேதியன்று காலமாகியுள்ளார். அவருடைய மகன் திரு. ப. ரவிப்பிரகாஷ் என்பவர் பார்வை இரண்டில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக திருவண்ணாமலை மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். அந்நியமன ஆணையின்படி **09.02.2024 முற்பகல்** முதல் பணியில் இணைந்து பணி புரிந்துவருகிறார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் இணைந்த நாளான 09.02.2024 **அன்று முற்பகல்** முதல் பணி வரன்முறைப்படுத்துமாறு பார்வை மூன்றில் காணும் கடிதத்தில் திருவண்ணாமலை மாவட்ட சுகாதார அலுவலரால் கேட்கப்பட்டுள்ளது.

2. இந்நேர்வில் பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணி நியமனம்) விதிகள் 2023–ல் பத்தி எண். (16) –ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளரின் பணியினை சம்பந்தப்பட்ட நியமன அதிகாரி அவரளவிலேயே அப்பணியாளர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறைப்படுத்த வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3) எனவே, இந்நேர்வில் கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. ப. ரவிப்பிரகாஷ் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர்



Scanned with OKEN Scanner

பணியினை, அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள்: 08.03.2023, பத்தி எண்.16-ல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் / விதிமுறைகளுக்குட்பட்டும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28 (1) இன்படியும், அவர் பணியில் சேர்ந்த நாளான **09.02.2024 அன்று முற்பகல்** முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையில் பணிவரன்முறைசெய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு தனியரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் **09.02.2024 முற்பகல்** முதல் பணி வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28 (1) இன்படி தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட **09.02.2024 முற்பகல்** முதல் மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவநிலையில் அமர்த்தப்படுகிறார்.

5) தனியர் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் அளிக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான பயிற்சியினை தகுதிகாண் பருவம் முடிப்பதற்குள் முடித்திடல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்.

**தி. சி. செல்வவிநாயகம்,**
இயக்குநர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு
மருந்துத்துறை, சென்னை-6.

**பெறுநர்**

திரு. ப. ரவிப்பிரகாஷ், இளநிலை உதவியாளர்,
மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகம், திருவண்ணாமலை.
(மாவட்ட சுகாதார அலுவலர், திருவண்ணாமலை மூலமாக)

நகல்

மாவட்ட சுகாதார அலுவலர், திருவண்ணாமலை.
(தனியரின் பணி வரன்முறை தொடர்பான உத்தரவினை பணிப் பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட சுகாதார அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் தனியரின் கீழ்கண்ட அசல் சான்றுகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது. அவற்றைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பிவைக்குமாறு மாவட்ட சுகாதார அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அசல் – (வ.எண். 2087791)
2. பனிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அசல் – (வ.எண். 2685083)
3. மாற்றுச் சான்றிதழ் அசல் (வ. எண். 1466)
4. சாதி சான்றிதழ் அசல் (வ. எண். 2102169)

-3

Scanned with OKEN Scanner

பதிவு அஞ்.



5. பட்டப்படிப்பு சான்றிதழ் அசல் (வ. எண். A 023348)
6. Provisional Certificate (வ. எண். 35239)
7. Degree Mark Sheet (வ. எண். 46486 / 69095)
8. Course – Cum Conduct Certificate (வ. எண். 001)
9. NIIT Post Graduate Diploma in Computer Applications (வ. எண். 07CA003060917)

நகல்

மாவட்ட சுகாதார அலுவலர், கோயம்புத்தூர்.
(மறைந்த அரசு ஊழியரான (அமரர்) திரு. அ. பரமசித்தர், சமைப்பவர் மற்றும் நீராளுநர், முடீஸ் நகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கோயம்புத்தூர் சுகாதார பகுதி மாவட்டம் (14.02.2010ல் இறப்பு) என்பவரின் பணிப்பதிவேடு–1 தொகுதி இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது. எனவே பணிப்பதிவேட்டினைபெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பிவைக்குமாறு மாவட்ட சுகாதார அலுவலர், கோயம்புத்தூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

நகல்: இப்பிரிவுஇருக்கை4.
இருப்புகோப்பு–1/உபரி –1.

//உண்மைநகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

தே.நி. கண்காணிப்பாளர்.
17/06/25

17/06/2025